


**15. 03. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழகம் உட்பட 5 மாநில சட்டப்பேரவை தேர்தல் தேதிகள் இன்று மாலை அறிவிக்கப்பட உள்ளன.

2. பிரதமர் திரு. நரேந்திரமோடி பட்ஜெட் அறிவிப்புகள் தொடர்பான எனது பாரதம் போட்டியில் வெற்றி பெற்றவர்களுடன் இன்று கலந்துரையாடுகிறார்.

3. தமிழகத்தில் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை நீக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

4. சர்வதேச நுகர்வோர் தினம் இன்று கடைப்பிடிக்கப் படுகிறது.

5. கொல்கத்தாவில் சர்வதேச டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் இறுதியாட்டத்தில் இந்தியாவின் கரண்சிங் இன்று களமிறங்குகிறார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் ஆணையம்

தமிழகம், கேரளம், மேற்கு வங்கம், அசாம் உள்ளிட்ட நான்கு மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச சட்டப்பேரவை தேர்தல் தேதிகள் இன்றுமாலை அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் மாலை 4 மணிக்கு செய்தியாளர்களை சந்திக்கும் தலைமை தேர்தல் ஆணையர் திரு. ஞானேஸ் குமார், தேர்தல் தேதி, வேட்புமனு தாக்கல் உள்ளிட்ட தேர்தல் அட்டவணையை வெளியிடுகிறார்

தமிழகத்தில் தற்போதைய 16-வது சட்டப் பேரவையின் பதவிக்காலம் வரும் மே மாதம் 10-ம் தேதியுடன் நிறைவடைகிறது.

இதேபோல் 294 உறுப்பினர்களை கொண்ட மேற்கு வங்க மாநிலத்தில் மே 7-ம் தேதியும்,

126 உறுப்பினர்களை கொண்ட அசாம் மாநிலத்தில் மே 20-ம் தேதியும்,

140 உறுப்பினர்களை கொண்ட கேரளம் மாநிலத்தில் மே 23-ம் தேதியும்,

30 உறுப்பினர்களை கொண்ட புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஜுன் 15-ம் தேதியும், தற்போதைய சட்டப் பேரவை பதவிக்காலம் நிறைவடைய உள்ள நிலையில் தேர்தல் தேதிகள் இன்று மாலை அறிவிக்கப்படுகின்றன.

இதனைத் தொடர்ந்து இன்று மாலை முதலே தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

வளர்ச்சியடைந்த பாரதத்தில் இளையோர்களின் பங்களிப்பு குறித்து பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று கலந்துரையாடுகிறார்.

2026-27-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கல்வி, திறன் மேம்பாடு, புத்தாக்கம், எதிர்கால வளர்ச்சியில் இளையோருக்கான வாய்ப்புகள் குறித்த எனது பாரதம் போட்டிகளில் வெற்றி பெற்ற இளையோர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

சுயசார்பு இந்தியாவை வடிவமைப்பதில் இளையோர் சக்தியை உறுதிசெய்ய நாடுமுழுவதும் இணையதளம் மூலம் நடைபெற்ற இப்போட்டியில் 12 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖

விமான சேவை

இந்தியாவிலிருந்து ஐக்கிய அரபு நாடுகளுக்கு இயக்கப்படவிருந்த 14 விமான சேவைகள் மேற்காசிய நிலவரத்தை தொடர்ந்து ரத்து செய்யப்பட்டுள்ளதாக ஏர் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில் ஷார்ஜாவிலிருந்து, புதுதில்லி, கண்ணூர், கொச்சி, கோழிக்கோடு, திருவனந்தபுரம் மற்றும் மும்பைக்கு விமானங்கள் இயக்கப்படுகின்றன.

இருப்பினும் நிலவரங்களை தொடர்ந்து கண்காணிப்பதுடன் தேவையின் அடிப்படையிலேயே இந்த விமானங்களும் இயக்கப்படும் என்று தெரிகிறது.

ஏற்கனவே முன்பதிவு செய்தவர்கள் கூடுதல் கட்டணங்கள் இன்றி பிற தேதிக்கு பயணத்தை மாற்றியமைக்கலாம் அல்லது பயணத்தை ரத்து செய்வதற்கான முழு தொகையையும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் இந்நிறுவனம் கூறியுள்ளது.

இதனிடையே சவுதி, பெஹ்ரைன், ஈரான், குவைத், ஓமன், கத்தார் உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் நாளைமுதல் வரும் 10-ம் தேதிவரை நடைபெறவிருந்த CBSE 12-ம் வகுப்பு

பொதுத்தேர்வுகள் ரத்து செய்யப்படுவதாக மத்திய கல்விவாரியம் அறிவித்துள்ளது.

ஏற்கனவே 10-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் ரத்து செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் 2 நாள் பயணமாக இன்று பெல்ஜியம் புறப்படுகிறார்.

ஐரோப்பிய கூட்டமைப்பின் 27 உறுப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களை சந்திக்கும் டாக்டர் ஜெய்சங்கர், பரஸ்பர உறவுகளை வலுப்படுத்துவது குறித்து முக்கிய பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

***PNG Surrender***

மேற்காசிய நிலவரத்தை தொடர்ந்து சமையல் எரிவாயு சிலிண்டர் இணைப்புடன், குழாய் மூலம் இயற்கை எரிவாயு இணைப்பு பெற்றுள்ளவர்கள் உடனடியாக தங்களது எரிவாயு சிலிண்டர்களை ஒப்படைக்க வேண்டுமென மத்திய பெட்ரோலிய அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

இவர்களுக்கு குழாய் மூலம் எரிவாயு தொடர்ந்து வழங்கப்படும் என தெரிவித்துள்ள அமைச்சகம், அங்கீகரிக்கப்பட்ட விநியோக நிறுவனங்களில் எரிவாயு சிலிண்டர்களை ஒப்படைக்கும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே ஈரான் ஹார்மோஸ் நீரிணை வழியாக இந்தியாவிற்கு புறப்பட்ட 92 ஆயிரத்து 700 டன் எடையுடன் கூடிய 2 திரவ எரிவாயு கப்பல்கள் இன்னும் ஓரிரு நாட்களுக்குள் குஜராத் துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுவதால் நிலைமை சீராகும் என நம்பப்படுகிறது.

## முதலமைச்சர்

தமிழகத்தில் வீடுகள், உணவகங்கள், வணிக நிறுவனங்களுக்கான சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை நீக்க மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சிலிண்டர் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் சிரமங்களை போக்க பிரதமர் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

இதனிடையே தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் சிலிண்டர் தட்டுப்பாடு பிரச்சனையை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

❖❖❖❖❖❖❖❖❖

## நுகர்வோர் தினம்

சர்வதேச நுகர்வோர் தினம் இன்று கடைப்பிடிக்கப் படுகிறது.

பாதுகாப்பான பொருட்கள் ! நம்பிக்கையான நுர்வோர்கள் ! என்ற இந்த ஆண்டின் கருப்பொருளுடன் நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

குறிப்பாக மின்னணு சந்தைகளில் வெளிப்படையான விநியோகம் மற்றும் நம்பகத் தன்மையை உறுதி செய்வதுடன் நுகர்வோர் மேலாண்மையை அதிகரிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தரமான தயாரிப்புகளை தேர்ந்தெடுப்பதன் மூலம் கலப்படங்களை தவிர்க்க முடியும் என்று தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் செயல்பாட்டு ஆர்வலர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் நிவாரணம்

விழுப்புரம் மாவட்டம் கீழ்புத்துபட்டு கோவில் குளத்தில் நேற்று மாலை தவறி விழுந்து உயிரிழந்த 2 சிறுமிகளின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்ச ரூபாய் வழங்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று உத்தரவிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கீதா ஜீவன்

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் திமுக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியமைக்கும் என மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மாநிலத்தின் திட்டங்களுக்கான போதிய நிதியை மத்திய அரசு வழங்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

தேர்தல் விழிப்புணர்வு

தமிழக சட்டப்பேரவை தேர்தல் தேதி இன்றுமாலை அறிவிக்கப்பட உள்ள நிலையில் பல்வேறு மாவட்டங்களில் முன்னேற்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதனொரு பகுதியாக 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி விருதுநகர் மாவட்டம் கூரைகுண்டு கிராமத்தில் விழிப்புணர்வு பேரணியை ஆட்சித் தலைவர் டாக்டர். சுகபுத்ரா இன்று தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

ஈரோடு மாவட்டத்தில் மத்திய பாதுகாப்பு படையினர் மற்றும் மாவட்ட காவல்துறையினரின் கொடி அணிவகுப்பு நடைபெற்றது.

அமைதியான மற்றும் சுதந்திரமான சூழலில் வாக்களிப்பதை உறுதிசெய்யும் வகையில் இந்நடவடிக்கை.

நீலகிரி வாய்ஸ்

நீலகிரி பைக்காராவில் சுற்றுச்சூழல் மாசுப்பாட்டை தடுக்க பெட்ரோல் டீசல் படகு சேவைகளை நிறுத்த உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ்..

❖❖❖❖❖❖❖❖❖

கோவில்

மயிலாடுதுறை மாவட்டம் திருவெண்காடு அருள்மிகு ஸ்வேதாரண்யேஸ்வரர் திருக்கோவில் பங்குனி தீர்த்தவாரியில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

ரயில்

மதுரை – கச்சிக்குடா வாராந்திர சிறப்பு விரைவு ரயில் தூத்துக்குடி வரை நீட்டிக்கப்பட்டு, இனி நிரந்தர ரயிலாக இயக்கப்படும் என தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

இதேபோல் கன்னியாகுமாரி – ஹைதராபாத் வாராந்திர சிறப்பு விரைவு ரயில் வரும் ஒன்றாம் தேதி முதல் வாரந்தோறும் புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் நிரந்தர ரயிலாக இயக்கப்பட உள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

கொல்கத்தாவில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் இறுதியாட்டத்தில் இந்தியாவின் கரண் சிங் – ஆஸ்திரேலியாவின் ஃபிலிப் செக்யூலிக்கை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖❖

குத்துச்சண்டை

பாங்காக்கில் நடைபெறும் சர்வதேச ப்யூச்சர்ஸ் கோப்பை குத்துச்சண்டை போட்டியில் 3 இந்திய வீராங்கனைகள் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர்.

51 கிலோ எடை பிரிவில் சந்திரிக்கா புஜாரியும்,

48 கிலோ எடை பிரிவில் குஞ்ஜன்

44 கிலோ எடை பிரிவில் ஜாய் ஶ்ரீதேவியும் இறுதி போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖